**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.28/2013**

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21–ம் நாள் வியாழக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 21.09.2023 | தந்தை/கணவர் பெயர்: | கிருஷ்ணமூர்த்தி |
| பெயர்: | சட்டையப்பன் (PW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | நெய்தவாசல் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 48/2023 |
| தொழில்: | | | |

**<u>5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 21.09.2023</u>**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

என்ன பரிகாரம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பி அட்டவணை சொத்தில் உள்ள 2 ½ செண்ட் நிலத்தை சுவாதீன மீட்பு கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து எந்த புல எண்ணில் உள்ளது என்றால் 55/2-ல் உள்ளது. தாவா சொத்து ராஜம்மாள் என்பவரால் கிரயம் பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி ராஜம்மாள் எனது தந்தை வழி பாட்டி என்றால் சரிதான். ராஜம்மாள் யாரிடமிருந்து தாவா சொத்து கிரயம் பெற்றார் என்றால் பத்தரிடமிருந்து கிரயம் பெறப்பட்டது. ராஜம்மாள் கிரயம் பெற்ற சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 10 செண்ட் ஆகும். மேற்படி 10 செண்ட்க்கான உரிமைமூல ஆவணம் பார்த்து பெறப்பட்டதா என்றால் ஆவணங்களை பார்த்து

தான் பெறப்பட்டது. தாவா சொத்து ரெங்கசாமி பத்தருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பது தெரியாது. தாவா சொத்தை ரெங்கசாமி பத்தர் தனிநபராக விற்பனை செய்தாரா அல்லது இளவருக்காக விற்பனை செய்யப்பட்டதா என்றால் தனிநபராக தான் விற்பனை செய்தார். ராஜம்மாள் கிரயம் பெற்ற போது தாவா சொத்தை அளந்து பார்த்து கிரயம் பெற்றாரா அல்லது அளந்து பார்க்காமல் கிரயம் பெறப்பட்டதா என்றால் அளந்து பார்த்து தான் கிரயம் பெறப்பட்டது. எந்த முறையில் அளவீடு செய்யப்பட்டது என்றால் கோல் போட்டு அளவீடு செய்யப்பட்டிருக்கும்.

ராஜம்மாள் கிரயம் பெற்ற வா.சா.ஆ.3 ஆவணத்தில் நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3-ல் வடக்கு பக்கம் யாருடைய நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. ராஜம்மாள் நான்கு புறமும் வேலி அடைத்து தான் 10 செண்ட்டை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. கிழக்கு புறம் மட்டும் தான் வேலியிருந்தது. தாவா சொத்தை பொறுத்து 1999-ம் வருடம் எனது தகப்பனார் மற்றும் அவருடன் பிறந்தவர்களுக்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. 1999-ம் வருட பாகப்பிரிவினையின் போது 5 அட்டவணையாக பிரிக்கப்பட்டதா என்றால் சரியல்ல, 4 அட்டவணையாக பிரிக்கப்பட்டது. அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7-ல் எனது தகப்பனாருக்கு தாவா சொத்தில் டி அட்டவணை சொத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

டி அட்டவணை சொத்தில் 3 அயிட்ட சொத்து தான் இவ்வழக்கு சொத்து என்றால் சரிதான். 1999-ம் வருட பாகப்பிரிவினையின்போது சொத்துக்கள் அளவீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். 1999-ம் வருடம் தாவா சொத்து காலி மனையாக இருந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீடு எந்த ஆண்டு கட்டப்பட்டது என்றால் எனது தாத்தா ரெத்தின படையாச்சியால்

கட்டப்பட்டது. ஆண்டு நினைவில் இல்லை. வீட்டின் தென் வடல், கிழமேல் அளவு எனக்கு தெரியாது. வீட்டின் தெற்கு புறமும், வடக்கு புறமும் காலி இடம் உள்ளது என்றால் சரிதான். வீட்டின் தெற்கு புறம் உள்ள காலியிடம் சுமார் 15 அடி அகலம், நீளம் சுமார் 300 அடிக்கு மேல் இருக்கும். மேற்படி காலி இடத்திற்கு தெற்கில் பரமசிவத்திற்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது.

வீட்டின் வடக்கு பக்கம் எவ்வளவு காலியிடம் உள்ளது என்றால் தென்வடல் 12 அடி அகலமும், கிழமேல் 300 அடி நீளமும் இருக்கும். வீட்டின் இருபுறமும் உள்ள காலி இடத்தின் வழியாக டிராக்டர்கள் சென்று வரஇடம் உள்ளது என்றால் முன்பு இருந்தது. தற்போது வடக்கு பக்கம் இடம் குறைவாக உள்ளது. வீட்டிற்கு வடக்குபுறம் உள்ள எனக்கு பாத்தியப்பட்ட காலி இடத்திற்கு அடுத்து கண்ணப்பன் நிலம் உள்ளது. 1-ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கு எவ்வளவு நிலம் இருந்தது என்றால் 3 ¼ செண்ட் நிலம் இருந்தது. சிவபிரகாசம் படையாச்சியின் ஒரே மகன் தான் 1-ம் பிரதிவாதியாவர். சிவபிரகாசம் படையாச்சியின் இறப்பிற்கு பிறகு அவரது மகனான 1-ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். கண்ணப்பன் 3 ¼ செண்ட்டுக்கு வடக்கில் இருந்த 6 செண்ட் நிலத்தை தெட்சிணாமூர்த்தி, கிருஷ்ணவேனியிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 3 ½ செண்ட்டுக்கு பதிலாக 6 செண்ட் என ஆவணம் ஏற்படுத்தியுள்ளார்கள்.

கண்ணப்பன் கிரயம் பெற்ற 6 செண்ட் செல்லாது என இதுவரையில் ஏதேனும் ஆட்சேபனை செய்தேனா என்றால் 2012-ம் வருடம் தெரிந்த பிறகு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா பி அட்டவணை சொத்தின் கிழ மேல், தென் வடல் அளவு தெரியாது. ஆனால் மொத்தம் 7 குழியாகும். நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தபின்பு தான் சரியான ஆக்கரமிப்பு அளவு தெரிய வந்துது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில்

பிரதிவாதி எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

5 முதல் 8 பிரதிவாதிகள் வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.